தென்னாட்டில் கொடிய பஞ்ச நிலை

Phone: No. 4502 Regd; No M 5458
விலை முக்காலணா இலங்கை 8 சதம்
மாலை மணி
(திராவிடர் தமிழ் தினசரி கருத்திதழ்)
மாலை 2 | சென்னை 11—5—51 | மணி 154

1108 ரேஷன் கடைகளுக்குப் பதில் 407 நியாய விலைக் கடைகள்

..................(0)..................

குடும்பம் குடும்பமாகப் பிச்சைக்காரராகும் கோரம்

சென்னை, மே 11—

சில மாவட்டங்களில் சுற்றுப்பயணம் செய்துவிட்டுச் சென்னை திரும்பிய உணவு அமைச்சர் பத்திரிகை நிருபர்களிடம் பேசியபோது, அண்மையில் தென்னாட்டில் பெய்த மழையின் காரணமாக உணவு நிலைமை உயர்ந்திருப்பதாகவும் பஞ்ச நிலை அகன்றுவிட்டதாகவும் கூறியுள்ளார்.

ஆனால் பொதுவாகத் தென்னாட்டில் மக்களின் பஞ்ச நிலை அகன்றிருப்பதாகத் தெரியவில்லை. மக்கள் உணவின்மையாலும் வேலையின்மையாலும் குடும்பம் குடும்பமாகப் பிச்சை எடுத்துக்கொண்டே ஜில்லா ஜில்லாவாகச் சுற்றிக்கொண்டு வருகின்றனர் சென்னைநகரிலும் இவ்வாறு பல பெண்களும் குழந்தை குட்டிகளுடன் பிச்சை எடுப்பதைக் காணலாம்.

கோயமுத்தூர் ஜில்லாவில் ரேஷன் இருந்த காலத்தில் அதாவது 1951 ஜனவரி 1-ஆம் தேதிக்கு முன்னர் 1108 ரேஷன் கடைகள் இருந்தன. ஆனால் இப்போது நியாய விலைக்கடைகள் என்னும் பேரால் 407 கடைகள் திறக்கப்பட்டிருக்கின்றன.

கோயமுத்தூர் ஜில்லாவிலேயே மிகவும் பாதிக்கப்பட்டுள்ள இடம் தாராபுரம் தாலுக்காவேயாகும். இங்குள்ள மக்கள் எதனையும் வாங்கும் சக்தியையும் பெற்றில்லை. சென்னை மாகாணக் கவர்னர் இங்கு வந்து பார்வையிட்டபோது 67 நியாய விலைக் கடைகளே இருந்தனவெனினும் இப்போது 93 கடைகளாகியிருக்கின்றன,

பல்லடம், உடுமலைப்பேட்டை தாலுக்காக்களில் நிலைமை மிகவும் நெருக்கடியாயிருக்கிறது. இப்போது பல்லடத்தில் 56 நியாய விலைக் கடைகளும் உடுமலைப்பேட்டையில் 29 நியாய விலைக் கடைகளும் இருக்கின்றன. முன்னர் உடுமலைப்பேட்டையில்மட்டும் 91 ரேஷன் கடைகள் இருந்தன.

இங்கு நிலமில்லாதவர்களுக்குக் கோதுமையும் பிறதானியங்களும் ஒரு நாளைக்கு ஆளொன்றுக்கு 6 அவுன்ஸ் வீதம் கொடுக்குமாறு அரசாங்கம் உத்தரவிட்டிருப்பதாகத் தெரிகிறது.

கோவில்பட்டிப் பிரதேசம் பூராவும் ஒரே பஞ்சமயமாகத்தானிருக்கிறது. எட்டையபுரத்துக்கு கிழக்கே உள்ள ஊர்கள் கொடிய பஞ்சத்தினால் பாதிக்கப்பட்டிருக்கின்றன. திருநெல்வேலி, ஸ்ரீவைகுண்டம், சோழவந்தான் பகுதிகளில் மக்கள் குடும்பம் குடும்பமாக ஊரைவிட்டுப் புறப்பட்டுவிட்டனர். இவர்கள் பிழைப்பைநாடி, உணவைநாடி எங்கெங்கோ சென்றும், பிழைப்புமின்றி, உணவும் கிடைக்காமல், காலராவுக்கும் பிறவகையான தொத்து நோய்களுக்கும் ஆளாகி மாளுகின்றார்கள். குடும்பம் குடும்பமாக இவ்வாறு நோய்க்காளாகி மாண்டுபோவதாகத் தெரிகிறது.

கோவில்பட்டி சந்தையில் பட்டினியால் வாடும் பெண்கள் சிலர் தங்கள் குழந்தைகளை விற்றுவிடுவதாகவும் தெரிகிறது.

ஆனால், இந்தப் பஞ்சப் பிரதேசங்களில் உணவுத் தானியங்கள் இல்லையென்று கூறமுடியாது கள்ளச் சந்தையில அரிசி கம்பு முதலியவை விற்கப்படுகின்றன. மக்கள் கையில் காசில்லாமையால், அவர்களால் வாங்க முடியவில்லை.

பஞ்ச நிவாரண வேலைகளோ சரியானபடி நடைபெறவில்லை. வெள்ளையர்கள் ஆட்சிக் காலத்தில் தாதுவருடப் பஞ்சம் ஏற்பட்டபோது, ஆங்காங்குக் கஞ்சித்தொட்டிகள் ஏற்படுத்தி ஏழைமக்கள் பசிப் பிணியைத் தணித்திருக்கின்றார்கள். ஆனால், நம் சுதந்திரக் குடியரசு அரசாங்கம் இந்த உதவியைக் கூடச் சரியானபடி செய்ய முன்வரவில்லை.

வங்கப் பஞ்சம் என்றும் பீஹார் பஞ்சம் என்றும், அஸ்ஸாம் நிதியென்றும் தென்னாட்டிலிருந்து எவ்வளவோ பணம் வசூல்செய்து வடநாட்டுக்கு அனுப்பி வைக்கப்பட்டது. காங்கிரஸ்காரர்கள் அப்போதெல்லாம் வரிந்து கட்டிக்கொண்டு தென்னாட்டிலிருந்து நிதிவசூலித்து அனுப்பிவைத்தார்கள். காங்கிரஸ் பத்திரிகைகள் இதற்கென முனைந்து நின்று வேலைசெய்து ஏராளமான பணத்தை வசூல் செய்தன.

ஆனால் இன்று தென்னாடு பஞ்சத்திலதவித்துக்கொண்டிருக்கிறது. நல்ல குடும்பங்களெல்லாம பிச்சை எடுத்து ஊரூராய் அலையும் கதிக்கு

(4-ம் பக்கம் பார்க்க)

ஆண்டவன் பெயரால் ரூபாய் ஆறுயிரம்!

..................(0)..................

நெசவாளர் மடியும் ஊரில்

..................(x)..................

பார்ப்பனர்களுக்கு வயிறுபுடைக்கச் சோறு

கீழப்பாவூர், மே 11—

இவ்வூர் கிருஷ்ணன் கோவில் கோபுரம் கட்ட பொதுமக்களிடம் (திராவிடர்களிடம்) ஆளுக்கு ரூ. 100, 200 என்று தண்டி ரூ. 6,000 சேர்த்தார்கள்.

இதில் கோபுரச் செலவு ரூபாய் 1,500, பித்தளைப் பொம்மை (சிலை)க்கு ரூ. 500 போக மீதி 4000–க்கு 40 பார்ப்பனர்கள் வரவழைக்கப்பட்டுள்ளனராம். இப்பார்ப்பனர்கள் ஒருவாரமாக வயிறு புடைக்க உண்கின்றனராம். அதாவது இவர்கள் உண்டு, கடவுளுக்குச் சக்தி யூட்டுகிறார்கள் ஓமம் வளர்த்து. பார்த்தீர்களா-இப்படிப்பட்ட மடமை இந்நாட்டில் தவிர வேறெந்நாட்டில் காண—கேட்க முடியும்? நாட்டில் கடும் பஞ்சம் தாண்டவமாடுகிறது. நெசவாளர் பட்டினியால் நாடோறும் பலர் மடிகின்றனர். அதேபோது ஆயிரக்கணக்கில் செலவழித்து ஆண்டவன் பெயரால் அர்ச்சகர்களுக்கு வாழ்வளிக்கின்றனர்.

இந்நாட்டில 100-க்கு 3 பேர்களுக்கும் குறைவாயுள்ள பார்ப்பனர்கள் உத்தியோகத் துறையில் ஏகபோகமாக —பெரும்பான்மையினர் உல்லாச வாழ்வில் கழிக்கின்றனர் மிஞ்சும் உச்சிக் குடிமிகள்-உத்தியோகம் கிடைக்காதவர்கள்-சோறுபிடித்தவர்களுக்கு-நம்மக்கள் (திராவிடர்) வாட-அவர்களுக்கு ஆண்டவன் பேரால் வாழ்வளிக்கிறது கள் வடிகட்டிகள்.

....

லண்டன், மே 10—

லண்டன் உயிர்க்காட்சிச் சாலையில் உள்ள 9 அடி நீளமுள்ள மலைப்பாம்பு மனிதர்களுடன் சென்ற சில திங்களாக மிக நெருங்கிப் பழகுகிறதாம். இதன் பண்பு இப்படியே நீடித்து இருக்கிறதா என்பதைப் பார்த்துக்கொண்டு பின் பார்வையாளர்கள் இதைத் தொட்டுப் பழக அனுமதிக்கப்படுவார்கள்.

காங்கிரஸார் காலித்தனம்

புளியங்குடி, மே 10—

இவ்வூரில் காங்கிரஸ் பகல்வேடதாரிகள் மே நாள் பொதுக்கூட்டம் நடத்தினர். அதுபோது நம் தோழர் "பேச்சுரிமை, எழுத்துரிமை என்றீர்களே, கூசபிகாரில் உணவு கேட்டதற்கு ஆட்சியாளர் மக்களைச் சுட்டனரே இது எந்த உரிமை" என்று கேட்டார். இதற்காக நம் தோழரைக் காலித்தனத்தின் சின்னமாகிய கதரன்பர், நகர காங்கிரஸ் க(ம)மிட்டித் தலைவர் ஓடிவந்து அடித்தாராம். பார்த்தீர்களா, காங்கிரஸ் காலிகளின் அட்டூழியத்தை?

....

மார்ஷல் தீவில் அணுக்குண்டு

வாஷிங்டன், மே. 10—

பசிபிக்கிலுள்ள மார்ஷல் தீவுகளில் அணுக்குண்டு பரீட்சார்த்தமாக வெடிக்கவிடவிருக்கிறது. இதுவரை இப்படி அணுகுண்டுப் பரீட்சித்துப் பார்த்ததில்லை என்று கூறப்படுகிறது.

இதைத்தவிர பூமிக்குள் அணுகுண்டுகளை வெடித்தும் பரீட்சித்துப் பார்க்கப்படும்.

ஐரோப்பிய நாடுகளின் தலைநகர்களை இணைக்கும் பஸ் சர்வீஸ்

பாரிஸ், மே 10—

13 ஐரோப்பிய நாடுகளின் தலைநகர்களை இணைக்கும் பஸ் சர்வீசை டூரிஸ்டுகளின் வசதியைக் கருதி நடத்த இந்நாடுகளிலுள்ள ரயில்ரோடு நிர்வாகிகள் ஒரு திட்டம் வகுத்திருக்கின்றனர். இந்த சர்வீஸ் டிக்கட் பெற்றவர்கள் பஸ்களிலும், ரயில்களிலும் அதே டிக்கட்டுகளைக் கொண்டு பிரயாணம் செய்யலாம்.

மாலை மணி

1—5—51 வெள்ளிக்கிழமை

அமைச்சர் அசட்டுப் பேச்சு

வகுப்புவாரி உரிமையை ஒழிக்கச் சென்னை ஆரியமும், டில்லி ஆரியமும் பெரும் பங்கெடுத்துக்கொண்டனவென்பதும், காங்கிரஸ் அரசாங்கம் இதுகுறித்துப் பரிதும் அக்கரை காட்டவில்லையென்பதும் பொதுமக்கள் மனத்தில் பதிந்திருக்கும் கருத்தாகும்.

தென்னாட்டில் வகுப்புவாரி உரிமையளிக்கப்படாமல், தகுதி திறமை என்று கூறிக்கொண்டு, மீண்டும் ஒரே இனம் ஏகபோக ஆட்சி செலுத்த முனைவதென்றால் இதற்கு இடமளிக்கப்படுவதென்றால், இதனால் நாட்டில் பெருங் கொந்தளிப்பான நிலைமை ஏற்படும் என்பதைப் பொதுமக்கள் நன்கு எடுத்துக்காட்டியிருக்கின்றனர் பல பொதுக் கூட்டங்களின் மூலமாக.

சென்னைப் பத்திரிகைகள் வகுப்புவாரி உரிமையை மத்திய அரசாங்கம் நிராகரித்துவிட்டது என்று பிரசாரம் செய்தபோதிலும், மத்திய அரசாங்கம் இதுபற்றி ஆழ்ந்து ஆலோசித்து வருவதாகச் சென்னை மந்திரிகள் கூறுகின்றனர்.

எது எப்படியாயினும் மத்திய அரசாங்கம் யோசித்தாலும் யோசிக்காவிட்டாலும், தென்னாட்டில் ஒரே இனம் உயர்வடையவும் மற்றை இனங்கள் அழுத்திவைக்கப்படவுமான நிலையைவிட்டுக்கொடுத்துக்கொண்டிருக்க முடியாது என்பதே பொதுமக்கள் கருத்தாகும்.

எனவே தான் வகுப்புவாரி உரிமைக்குப் பங்கம் ஏற்படக் காரணமாயிருந்ததாகக் கருதப்பட்ட சென்னை அமைச்சர்கள் எங்குச் சென்றாலும் கறுப்புக் காடி காட்டி வரவேற்கப்பட்டனர். மக்கள் தங்கள் வெறுப்புணர்ச்சியை மந்திரிகளுக்கு நன்கு எடுத்துக் காட்டினர்.

பொது மராமத்து இலாக்கா அமைச்சர் ஆரணிக்குச் சென்றிருந்தபோது, அங்கும் பொதுமக்களும் மாணவர்களும் கறுப்புக் கொடி காட்டி, வகுப்புவாரி உரிமையைக் கோரியும, நூல் சபையை அதிகரிக்குமாறு கூறிக் கிளர்ச்சி செய்தனர்.

இதற்கு அவ்வமைச்சர் அங்குக் கூறியிருக்கும் அசட்டுப் பதிலிலிருந்து, காங்கிரஸ் அமைச்சர்களின் உள்ளக் கருத்து யாதென்பதும் அவர்கள் எந்நிலையில் வேலை செய்கின்றனரென்பதும் நன்கு விளங்கக் கிடக்கின்றன.

மாணவர்கள் வகுப்புவாரி உரிமைப்படி தங்களுக்குக் கல்லூரிகளிலும அரசாங்க பதவிகளிலும் இடம் ஒதுக்கவேண்டுமென்று கோரினால், எத்தகைய சம்பளமுள்ள பதவியாயிருந்தாலும அவற்றை ஏற்றுக்கொள்ள மாணவர்கள் முனைவரா என்று கூறி, மாணவர்கள் பொதுநலன் கருதியே உழைக்கவேண்டுமென்று போதித்துள்ளார் அமைச்சர்.

பொதுநலனுக்கு உழைப்பது வேறு; வகுப்புவாரி உரிமை கோருவது வேறா? வகுப்புவாரி உரிமை கோருவதே பொதுநலன் கருதி உழைப்பதல்லவா? பொதுவாக எல்லா மக்களுக்கும் கல்வியிலும் உத்தியோகங்களிலும் பங்கிருக்கவேண்டுமே யொழிய ஒரே இனத்தார் அவற்றை அடையவிட்டுக்கொண்டிருப்பது கூடாது என்று கூறுவது பொதுநல வேலையில்லையா? மந்திரியால் இதை உணர்ந்துகொள்ள முடியவில்லை.

அதே இடத்தில், நீர்ப்பாசன வசதி கோரிய மக்களிடத்தில் "நீர்ப்பாசன வசதிகள் கோருகிறீர்களே! வகுப்புவாரி உரிமைப்படி உங்கள் வகுப்பு இஞ்சினியர் ஒருவரை நீங்கள் விரும்புகிறீர்களா? அல்லது பெரும் பணச் செலவில் ஒரு நீர்ப்பாசனத் திட்டத்தை நீங்கள் விரும்புகிறீர்களா" என்று அமைச்சர் கேட்டுப் 'பின்னதை விரும்புவதுதான் புத்திசாலித்தனம், அதைத்தான் மக்கள் விரும்புவார்கள்" என்றும் கூறியுள்ளார். பெரும பணச் செலவில் நீர்ப்பாசனத் திட்டம் இடுவதற்கே இஞ்சினியர் வேண்டுமே. வெறும் திட்டம் மட்டும் பயன்படாதே. அத்திட்டத்தைச் செயல் முறையில் கொணர இஞ்சினியர் வேண்டுமே. அத்தகைய இஞ்சினியர்களை ஒரே இனததிலிருந்து உற்பத்தி செய்யாமல் எல்லா இனமக்களும் அத் தகுதிவாய்ந்தவர்களாகச் செய்யவேண்டுமென்பதே வகுப்புவாரி உரிமைக் கோரிக்கையின் கருத்தென்பதை இந்த மந்திரி உணராமல் அசட்டுத்தனமாகப் பேசியிருக்கும் பரிதாப நிலை கண்டு நாம் இரக்கப்படுகிறோம். காங்கிரஸ் ஆட்சியிலே மக்கள் மனநிலையையும் விஷயங்களின் போக்கையும் மந்திரிகள் எவ்வாறு உணர்கிறார்கள் என்பதற்கு இது ஒரு சான்று.

நம்பிக்கை நாசமாயிற்று

ஆளத் தகுதியற்றவர்கள்-மக்களைப் பட்டினி போடுகின்றனர்

—(0:)—

பொள்ளாச்சி மே நாள் கூட்டத்தில் கழகத் தோழர்கள் பேச்சு

பொள்ளாச்சி, மே 8—

திராவிட முன்னேற்றக் கழகம், திராவிட முன்னேற்ற வாலிபர் கழகம், கம்யூனிஸ்டுக் கட்சி, முற்போக்கு இளைஞர் சங்கம் ஆகியவற்றின் சார்பில் 5-5-51-ந் தேதி கம்யூனிஸ்டுக் கட்சிக் கொடி-திராவிட முன்னேற்றக் கழகக் கொடிகளால் அலங்கரிக்கப்பட்ட எண்ணற்ற சைக்கிள்களில் தொண்டர்கள், "அடக்குமுறை ஆட்சி ஒழிக! கம்யூனல் ஜீ ஓ. வேண்டும்! ஆரிய மாயைத் தடையைநீக்கு! பாதுகாப்புக் கைதிகளைவிடுதலைசெய்!" என்ற பேரொலிகளோடுநகரின் பல பகுதிகளிலும் ஊர்வலம் வந்தனர். கடுமையான மழையின் காரணமாக மாலை நடக்கவேண்டிய கூட்டம் 7-5-51ந் தேதி தேர்நிலைத் திடலில் கழகச் செயலாளர் தோழர் பொ. வ. ராதா அவர்கள் தலைமையில் நடைபெற்றது. தலைவர் முகவுரைக்குப் பின் தோழர் சு. இளமாறன் சிறிது நேரம பேசியபின் கோவைமாவட்ட தி. மு. க. துணைச் செயலாளர் தோழர் பி. என். இராமானுசம் பேசினார். அதன் சுருக்கம்: தலைவர் அவர்களே! தோழர்களே! தாய்மார்களே! பேச வாய்ப்பளித்தமைக்கு முதலில் நான் வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்ளுகிறேன். இன்று திராவிட முன்னேற்றக் கழகமும், கம்யூனிஸ்டுக் கட்சியும் ஒன்று சேர்ந்து இந்நகரத்தில் மே நாள் விழாவினைக் கொண்டாடுகிறது. இரண்டு கட்சியும் ஒன்று சேர்ந்து கூட்டம் நடத்துவதைக் காணும் போது அரசாங்கம் அலறுகிறது. காங்கிரஸ்காரர்கள் கலங்குகிறார்கள்.

அன்னியன் ஆட்சி இருந்த காலத்தில் அவன் ஆட்சி ஒழிய வேண்டுமெனப் போராடிய காங்கிரஸ்காரர்கள்-காந்தியாரின் ஆசிரம வாழ்க்கையைப் பின்பற்றி சத்தியத்தைக் கடைபிடிப்பதாகக் கூறிக் கொண்டவர்கள் . இப்பொழுது ஆட்சிப்பீடத்தில் இருந்து வருகிறார்கள். காங்கிரஸ், ஆட்சிக்கு வந்தால் மக்கள் வாழ்வில் ஒரு மறுமலர்ச்சி உண்டாகுமென்று மக்கள் நம்பினர். நம்பிக்கை நாசமாயிற்று. எங்கு பார்த்தாலும் பஞ்சம்! பட்டினி! வேலையில்லாத் திண்டாட்டம்!

அகிம்சையை அணிகலனாகக் கொண்ட காங்கிரசாட்சி பட்டினி ஊர்வலத்தின் மீது துப்பாக்கிப் பிரயோகம் செய்கிறது! எங்கும் அடக்குமுறை. தடியடி, 144 துள்ளி விளையாடுகிறது. இட்லரும், முசோலினியும் வெட்கித் தலைகுனியும் அளவுக்கு நாசகர ஆட்சி நடத்துகின்றனர். பாரதமாதாவின் அருந்தவப் புதல்வர்கள் ஆட்சி செய்கிறார்கள்; இவர்களுக்குத் திராவிட முன்னேற்றக் கழகத்தார் எழுதிய புத்தகத்தைக் கண்டால் நடுக்கம்! பேச்சைக் கேட்டால் பீதி! பயத்தின் காரணமாக ஆட்சியாளர்கள் அத்தனையும் தடை செய்கிறார்கள். போலீஸ் பந்தோபஸ்தோடு நகரில் ஊர்வலம் வருகிறார்கள், மந்திரிகள். கதர் கட்டிக் கொண்டு, சுரண்டலும் சுயநலமும் கொண்டு ஆட்சிப் பீடத்தில் அமர்ந்திருப்பவர்கள் ஒழிக்கப்பட வேண்டுமானால், பாட்டாளி துயர் நீங்கி மக்கள் மாண்புடன் வாழ வேண்டுமானால் திராவிடநாடு பிரிந்தாகவேண்டும் என்று கூறியதோடு மே நாள் விழாவின் வரலாற்றை விளக்கிக் கூறினார்.

அடுத்தபடி பாதுகாப்புக் கைதியாக இருந்து சமீபத்தில் விடுதலையான கம்யூனிஸ்ட் தோழர் வ பழனிச்சாமி மே நாள் ஏன் கொண்டாடுகிறோம் என்பது பற்றியும், இந்திய ஆட்சியில் வெள்ளையனைவிட ஒரு படி அதிகமாகவே அடக்குமுறைகளை அள்ளி அள்ளி வீசுகிறார்களென்றும், தொழிலாளர்களின் நிலைமை பற்றியும், வருகிற பொதுத் தேர்தலில் காங்கிரஸை ஒழித்துக்கட்ட எல்லா இயக்கங்களும் ஒன்றுபட்டு ஒரு பொதுவான திட்டத்தின் கீழ் போட்டியிட வேண்டுமென்றும், அகில உலகச் செய்திகளையும் விரிவாகக் கூறிய பின் தோழர் இராமலிங்கம் அவர்களால் "கம்யூனல் ஜீ. ஓ. வேண்டுமென்றும் பாதுகாப்புக் கைதிகளை விடுதலை செய்யக் கோரியும், புத்தகங்கள் மீதுள்ள தடையை நீக்கக் கோரியும் மற்றும் பல தீர்மானங்கள் நிறைவேறிய பின் தலைவர் முடிவுரைக்குப் பின் நன்றிகூறக் கூட்டம் கலைந்தது.

தெ. இ. ரெயில்வே லேபர் யூனியன் மத்திய சங்க கூட்டம்

மே மாதம் 12, 13 தேதிகளில் பொன்மலையில் தெ இ. ரயில்வே லேபர் யூனியன் மத்திய சங்க கூட்டம் நடைபெறும். 14-ம் தேதி மாலை ஒரு பொதுக்கூட்டம் நடைபெறும. மத்திய சங்கக் கூட்டத்தில், A. I. R. F. சமீபத்தில் நிறைவேற்றியுள்ள ஸ்ட்ரைக் பாலட் தீர்மானம் பற்றியும், 3 ரயில்வேக்களின் இணைப்பு சம்பந்தமாகவும், அதனடிப்படையில், சங்கங்களின் இணைப்பு குறித்தும், இன்னும் பல விஷயங்கள் பற்றியும், விவாதித்து முடிவெடுக்கப்படும். ரயில்வேத் தொழிலாளிகள் பெரும் அளவிற்கு கலந்துகொண்டு கூட்டத்தை வெற்றிகரமாக நடத்தும்படி கேட்டுக் கொள்ளப்படுகிறது. பிரதிநிதிகள் கட்டணம் (உணவிற்கு) நாள் ஒன்றுக்கு ரூ. 1 விதம் கொடுக்க வேண்டும்.

ஆளத்தெரியாதவர்கள் - - நம்மையாளுகின்றனர்

....

முன் ஷி அமெரிக்கரிடமிருந்து ரூ. 50,000 பெற்றுரா?

............(-)............

உத்தரப் பிரதேச அரிசிக்கு மும்மடங்கு விலை வாங்கியதேன்?

சேலம், மே, 5—

சேலம் மாவட்ட தி. மு. க. முதல் மாநாட்டில் தலைமை தாங்கிய தோழர் ஜான் அவர்கள் ஆற்றிய சொற்பொழிவின் இன்னொரு பகுதி வருமாறு:—

ஜனநாயக அரசு மலர, காங்கிரஸ் சர்க்கார், காட்டும் செயல் முறைத் திட்டங்களென்ன?

144 153-எ செக்ஷன், தடியடி, துப்பாக்கிப்பிரயோகம், அடக்கு முறை தர்பார், கண்ணீர்ப்புகை பிரயோகம்! இந்த நாட்டு ஆளவந்தார்கள் ஜனநாயகப் மலர கையாளும் செயல் திட்டங்கள்!

எந்த நாட்டு ஜனநாயக சர்க்காரிலும், எதிர்க்கட்சிக்கு நல்ல மதிப்பிருக்கும், கௌரவமிருக்கும், செல்வாக்கு ஏராளம்! காரணம் அவர்கள்தான் ஆளும் நிலையில் உள்ள கட்சியை நல்ல பாதைக்கு வழி காட்டுவார்கள்! பாசிசப் படுகுழி நோக்கி விரையும்கட்சியைத் தடுத்து நிறுத்தி வேறு பாதை செலுத்துபவர்கள்!

எனவேதான் ஜனநாயகம் பேணும் எந்த சர்க்காரும் எதிர்க்கட்சியை விரும்பி வளர்ப்பார்கள்! ஆனல் இந்தக் காங்கிரசாட்சியிலே தான் இந்தச் சம்பவங்கள் நாம், நடைபெறப் பார்க்க முடியவில்லை!

கலையிலே காணும் அறிவுக் கருத்துக்களைக் கூடப் பரவ அனுமதிக்க முடியாத இந்த சர்க்கார் எப்படி மக்கள் சர்க்கார் என்று தம்மைக் கூறிக்கொள்ள முடியும்? சிந்தனையைத் தூண்டி விடும் புத்தகங்கள், நாடகங்கள், வரலாறுகள் முதலியவை இவர்களால் தடைபடுத்தப் படுவானேன்? கலை மாநாடுகளும், சாதாரண மாநாடுகளும் ஏன் தடைப்படுத்தப்படுகின்றன? பொது கூட்டங்களுக்கு ஏன் 144? ஏன் இந்தக் கூடடத்தைக் கலைக்கிறுய்? சுடுகிறுய் இதற்குப் பெயரா ஜனநாயகம்? இல்லை, வடித்தெடுத்த ஏதேச்சாதிகாரம்! ரஷ்ய ஜாரும், பிரெஞ்சு லூயியும், இங்கிலாந்து சார்லசும், இவர்களாட்சியில் நல்லவர்களாக ஆக்கப்பட்டிருக்கிறுர்கள்! பொது ஜன உரிமை மறுக்கப்படுவானேன்? தனி நபர் உரிமை சீரழிக்கப்படுவானேன்?

இவர்களாட்சியிலே ஜனநாயகம் மருந்துக்குக்கூட இல்லை. இவர்களிடம் நாட்டுக்கு நல்லது செய்யும் திட்டம் என்ன இருக்கிறது! மூன்றுண்டுகள் கடந்த பிறகும் வறுமைத் தொலையவில்லை, பஞ்சம் போகவில்லை என்றுல்—மூன்றுண்டுக் குழந்தையல்லவா-என்றுநீ காரணம் காட்டுவது?

எப்படிச் செஞ்சீனு பொருளாதாரத்தில் மிகப் பிற்போக்கிலே கிடந்த நாடு, தன்னைச் சரிப்படுத்திக்கொண்டது வறுமையும் வேலையில்லாத் திண்டாட்டமும் அவர்களுக்கும்தான் இருந்தன. எப்படி அவர்களால் அவற்றைப் போக்க முடிந்தது? உழவர்ப் பிரச்னையை அவர்கள் எப்படிச் சமாளித்தார்கள்? பெருவெள்ளத்தால் ஏற்பட்ட கஷ்டத்தையும் நஷ்டத்தையும் எப்படி அவர்கள் போக்கினுர்கள்? இன்றைய தினம் "இல்லையே உணவில்லையே, கதியில்லையே எனும் நிலைமை இனிமேலில்லை எனவே முரசறைவாய்" என்றல்லவா செஞ்சீனு பாடுகிறது! வரவு செலவு திட்டத்தை நீ பாராளுமன்றத்திலே வாசிக்கிறுய்? பற்றுக்குறை தென்படுகிறது. பாகிஸ்தானத்திலே மிகுதி பட்ஜெட் சமர்ப்பிக்க அவர்களால் எப்படி முடிந்தது?

ஆக, ஆளத்தெரியாதவர்களும், ஆளும் வழி அறியாதவர்களும் இன்று நம்மையாளுகிறுர்கள்! உணவில்லை என்ற நெருக்கடி முற்றிய நேரத்திலும், இப்போது ரஷ்யாவும் செஞ்சீனுவும் உணவுத்தரத் தயார். எந்த நிபந்தனையும் கிடையாது என்று வெளிப்படையாகத் தெரிவித்ததற்குப் பிறகும் அதைப்பெற இந்த அரசாங்கம் மறுப்பானேன்? அமெரிக்காவிடமிருந்து தான் பெறுவோம் என்ற வீண் வைராக்கியம் உனக்கேன் வந்தது? வாழ்வதா சாவதா என்ற போராட்டத்தில், மக்கள் பட்டினி நாளுக்கு நாள் பெருகுகிறது! எவராலும் என்ன? உணவுத் தேடிக்கொடுப்பதல்லவா முறை? ஏன் அதை அரசாங்கம் செய்யவில்லை? ஏன் தோழர் முன்ஷி செய்யவில்லை? எப்படிச் செய்வார்? செய்ய அவருக்கென்ன தெரியும்? உணவுப் பொறுப்பிலே இருந்து நாட்டுக்குத் தொண்டாற்ற வேண்டிய முன்ஷி கம்யூனிசப் பேரலையைத் தடை செய்யும் முயற்சியிலே ஈடுபடுகிறுர். அமெரிக்காவிற்கு நல்ல பிள்ளையாயிருக்க! மானம், வெட்கம், சூடு, சொரணை இவையின்றி. 43-பார்லிமெண்டு அங்கத்தினர்கள் இந்த அறிவாளி முன்ஷியைத் தலைமையாகக் கொண்டு அமெரிக்காவிடம் குறையிரந்திருக்கின்றனர்! இந்தியாவின் பொருளாதாரநெருக்கடியைச் சமாளிப்பது அமெரிக்காவின் கடமை! அதன் மூலம் கம்யூனிசத்தை ஒழித்துக்கட்டிவிடலாம் என்றுதண்டனிட்டிருக்கிறீர்! அமெரிக்காவிடமிருந்து ரூ. 50,000 முன்ஷி இரகசியமாகப் பெற்றிருக்கிறுர் என்று டெல்லி வட்டாரங்கள் கூறுவதற்குப் பதிலிறுக்க முன் வருமா அரசாங்கம்!

ஆக நாட்டைக் காட்டிக்கொடுப்பவர்களும் ஆளுந்திறமையற்றவர்களும் சேர்ந்து, நம் தென்னுட்டையும் சேர்த்து சிதைக்கிறுர்கள்! நம் நாட்டின் விமோசனம், நம்நாட்டை நாம் அடைவதிலே தான் அமைந்திருக்கிறது!

இன்றையத் தினம் நம் பிரச்னை பெருமளவிற்கு வளர்ந்திருக்கிறது என்பதை நீங்கள் மறந்துவிடக் கூடாது! "திராவிடநாடு திராவிடருக்கே" என்ற இலட்சியம் கொண்ட முரசம் எங்கும் முழங்கத் தொடங்கிவிடடது!

கேரளர் கேட்டார்களா? கன்னடர் கைகொடுத்தார்களா? ஆந்திரர் ஆதரித்தார்களா? என்ற இரண்டு வார்த்தை ஜாலங்களைக் கிளப்புவதற்கு மட்டும்-அதற்கென்றே ஒரு கட்சியை வைத்து நடத்தி, சுயலாபம் தேடும் இலாப வேட்டைக்காரர்கள், காலம் போகும் நிலைமையறியாதவர்கள் உளருகின்றனர்

தோழர்களே நான் உங்களுக்குக் கூறுவேன், கேரளத்திலே நமது முரசம் முழங்கத் தொடங்கிவிட்டது! சட்டசபைகளிலே நமது முழக்கம் வேலை செய்கிறது! உங்களுக்குதான் ஆதாரம் காட்டுகிறேன், நமது பிரச்னை எந்த அளவிலே அங்கு புகுந்திருக்கிறது என்பதைத் தெரிந்துகொள்ள! அசெம்பிளி அங்கத்தினர்கள், மத்திய அரசாங்கத்தின் அனுவசியமான தலையீடுபற்றியும், மாற்றுந்தாய் போக்கு பற்றியும் ஆவேசத்தோடு கண்டித்துப் பேசியிருக்கிறுர்கள். குறிப்பாகத் திருவிதாங்கூர் முன்னுள் பிரதமர் பட்டம்தாணுப் பிள்ளை உணவு விஷயத்தில மத்திய அரசாங்கத்தின் பாரபட்சமான போக்கைப்பற்றி பேசும்போது, "இந்தியா ஒன்று என்று வாதிக்கும் பண்டிட நேருவைக் கேட்கிறேன், முன்ஷியைக் கேட்கிறேன், ஏன் உத்தரப்ரதேச அரிசிக்கு மூன்று விலை கூட்டி எங்களிடம் வாஙகுகிறீர்கள? மத்திய அரசாங்கத்தின நேரடி அதிகாரம் வைத்திருப்பது நம்மை நெறுக்கிக் கொல்வதற்கா? சமஸ்தானம் நெருங்குகிறது! சமஸ்தானத்தை நெருக்கிக் கொல்லும் முயற்சி நடைபெறுகிறது. இதற்குத்தானு மத்திய அரசாங்கம் தேவை! பட்டம்தாணுப் பிள்ளை எழுப்பும் இந்தக் கவலைக் குறி ததும்பும் கேள்வி, கோபக் கனல் குறிக்கும் வார்த்தைகளாக உருவெடுக்கும் நாள் நெருங்குகிறது.

இன்னொரு அங்கத்தினர் ஆர். சங்கர் அதைவிடச் சற்றுத் துணிச்சலாகவே பேசித் தீர்மானித்திருக்கிறுர் "திருவிதாங்கூரின் உணவுப் பொருள் விளைவு மொத்தம முப்பது தசமானம். மத்திய அரசாங்கம தருவது 35 சதமானம். ஆக மொத்தம் 65 சதமானம். இதன் காரணமாக பற்றுக்குறை நீடிக்கிறது! ஏனைய சமஸ்தானங்களுக்குடன் ஒன்றுக்கு ரூ. 15—8—0 விலைக்குக் கொடுக்கும்போது நம்மிடம் மட்டும் ரூ. 17—8—0 ஈடாக்குகிறுர்கள்.

(தொடரும்)

குறட்டையை நிறுத்துவதில் வெற்றி!

நியூயார்க், மே.1[illegible]

தன் கணவன் தூங்கும்போ[illegible] பெருவாரியாகக் குறட்டை வி[illegible] தாகவும், தன்னுல் பொறுக்கமு[illegible] வில்லை என்றும், குறட்டை[illegible] நிறுத்தாவிட்டால் மணத் தொ[illegible] யைத் துண்டிப்பது தவிர வே[illegible] வழியில்லைஎன்றுஇருபதுவயதுள்[illegible] மனைவி அறிவித்து விட்ட செய்[illegible] நினைவிருக்கும்.

குறட்டைவிடும் மிசாலத்திற்[illegible] குறட்டையை நிறுத்த என்[illegible] செய்யலாம் என்று சுமார் 5[illegible] யோசனைகளுக்கு மேல் உலகின் ப[illegible] பாகங்களிலிருந்து கிடைத்த[illegible] அவற்றில் இவர் எதைப் பி[illegible] பற்றினுர் என்று தெரியவில்லை[illegible] இப்போது குறட்டை விடுவ[illegible] அநேகமாக நின்றுவிட்டதாம்.

அவருக்குக் கிடைத்த யோசனை[illegible] களில் சில முக்யமானவை:

மனக் கட்டுப்பாடு தினம் தூ[illegible] குகப் போ முன் இன்று நா[illegible] குறட்டைவிட மாட்டேன் என்[illegible] 100 தரம் சொல்லிப் பின் படுக்[illegible] வேண்டும்.

படுக்குமுன் பச்சைவெங்காய[illegible] பல தின்றுவிட்டுத் தூங்கவேண்டு[illegible] சாப்பாட்டுகளுக்கிடையே ஆட்டு[illegible] பாலைக் குடிக்க வேண்டும். இவ[illegible] தூங்கும் போது தினம் இ[illegible] ருடைய நண்பர்கள் சிலர் உன்னி[illegible] பாக இவர் குறட்டை விடுகிறு[illegible] இல்லையா என்பதைக் கவனித்[illegible] வருகின்றனர். இவர்கள் மிசால[illegible] குறட்டை விடுவதை எப்படியே[illegible] நிறுத்தி விட்டதாகவே கூறுகின்[illegible] னர்.

குரட்டையை நிறுத்த என்[illegible] வழியைப் பின்பற்றினுர் என்பதை[illegible] அறிய இவரை வட்டமிடப் பத்[illegible] ரிகை நிருபர்கள் தொடங்கி விட்ட[illegible] தாகத் தெரிகிறது.

....

கோவை மாணவத் தோழர்கட்கு

15-5-51 காலை 10 மணிக்கு நக[illegible] கழகக் கட்டடத்தில் கோவை[illegible] மாவட்டத் தி மா. மு. கழகச்[illegible] செயற்குழுக்கூட்டம்நடைபெறும்[illegible] அதில் மாவட்ட மாநாடு ஜூன் தி[illegible] களில் கோவையில் நடத்தும்[illegible] முறை பற்றி ஆலோசிப்பதுடன்[illegible] வரவேற்புக் கமிட்டி அமைக்கப்[illegible] படும். கழகம் அமைத்துள்ள[illegible] தோழர்கள் உடன், மாவட்ட[illegible] உறுப்பினர்களாக இருவரை[illegible] அனுப்புவதுடன் செயற்குழுக்[illegible] கூட்டத்தில் கலந்துகொள்ளுமாறு[illegible] கேட்டுக்கொள்ளுகிறேன்.

அ. ச. இளங்கோ
செயலாளர்

ஏ. கே. வேலன் சுற்றுப்பயணம்

13—5—51	பெங்களூர்
20—5—51	திண்டிவனம்
27—5—51	கும்பகோணம்
3—6—51	தொரப்பாடி

கம்பாசிடர் தேவை

தமிழ்-ஆங்கிலம் தெரிந்த கம்பாசிடர்கள் தேவை. நேரில் விண்ணப்பித்துக் கொள்ளவும்.

மானேஜர்

மே நாள் விழா

✕

மூ. களத்தூர்

1-5-51-ல் திராவிட முன்னேற்ற கழகக் கட்டடத்தில் தோழர் க. வி. எம். இரங்கசாமி அவர்கள் தலைமையில் மே நாள் விழாச் சிறப்பாகக் கொண்டாடப்பட்டது. அதுபோது-தோழர்கள் எம். சண்முகம், ஏ. பி. மதுரைவீரன், கே. பூவலிங்கம், டி. எம். சி. தேசன், க. பி. நடராசன் ஆகியோர் மே தினமும் திராவிட முன்னேற்றக் கழகமும் என்பது பற்றிச் சொற்பொழிவாற்றினர். பின்னர் உறுப்பினர் தேர்ந்தெடுக்கப்பட்டனர். ஏ. பி. மதுரைவீரன் செயலாளராகவும்; கே. ஒ. மயில்வாகனன் துணைச்செயலாளராகவும், வி. கே. பழனியாண்டி பொருளாளராகவும், எம் வீராச்சாமி விளம்பர உறுப்பினராகவும்; இருபத்தாறு பேர்கள் அங்கத்தினர்களாகத் தேர்ந்தெடுக்கப்பட்டு இரவு 10-30 மணிக்குச் செயலாளர் நன்றிகூறக் கூட்டம் முடிவு பெற்றது.

* * *

செயங்கொண்டான்

உலக பாட்டாளி மக்களின் விடுதலை விழாவான மே நாளில் விரைவில் திராவிடம் காணுவோ" மென்று சூளுரைத்த தோழர்கள் . இராமசாமி, சு. இளநாகன் ஆகியோர் கடைவீதி, காந்திபூங்கா முதலிய இடங்களில் காலை மணிக்கு நம்து கழக இலட்சியக் கொடியை ஏற்றிவைத்தனர். அன்றே, இலட்சிய முழக்கத்தோடு அயராது உழைத்த அஞ்சாநெஞ்சன் பெயரில் "அழகிரிப்படிப்பகம்" தி மு க. சார்பாக கடைவீதி, ஏன்முனைப்பாதை முதன்மையில் அமைக்கப்பட்டது.

* *

புக்கிப்பேட்டை, பெங்களூர்

"திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் "மேநாள்விழா" கொண்டாடப்பட்டது. அதுசமயம் மேநாளைக்குறித்து, பி. முனிரத்தினம், மா. மன்னர். பெ. வ பொன்னுரங்கம், மு அரங்கசாமி, வ. ஜெ. எஞ்சோன் ஆகியோர்கள் "மேநாள் ஏன் கொண்டாடுகிறோம்" என்பதை விளக்கிப் பேசினர். செயலாளர் நன்றி நவில கூட்டம் இனிதே முடிவுற்றது.

* *

நாகர்கோவில்

1-5-51ல் கழகக் கட்டடத்தில் வைத்து தோழர் எஸ். சிவராமன் அவர்கள் தலைமையில் மே நாள் விழாச் சிறப்புற நடைபெற்றது. அவ்வமயம் பல தோழர்கள் மே தின விழாவின் நோக்கத்தைப்பற்றியும், நெசவுத் தொழிலாளர்களின் துயரத்தைப் பற்றியும், இன்றைய அரசாங்கத்தின் அடக்குமுறையைக் கண்டித்தும் பேசினர்.

* *

சீவில்லிபுத்தூர்

6-5-51-ம் நாள் சிவில்லிபுத்தூர் நகர் திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பாக நாயர் சதுக்கத்தில் சாபுரம் தோழர் முத்துச்சாமி அவர்கள் தலைமையில் மே நாள் விழா மிகச் சிறப்பாக நடைபெற்றது. அதுபோது விருதை தோழர்கள் ப. சி. அ. வணங்காமுடி, மு. இளஞ்செழியன் அவர்களும், தஞ்சை தோழர் டி. எம். இக்பால் அவர்களும் மே நாள் என்பதுபற்றிச் சொற்பெருக்காற்றினர்கள்.

தென்னாட்டில்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

ஆளாக்கிவிட்டன.

வடநாட்டுக்கு நிதி வசூல் செய்தளித்த காங்கிரஸ்காரர்கள் இன்று என்ன செய்கின்றனர்? காங்கிரஸ் அரசாங்கம் என்ன செய்கிறது? காங்கிரஸ் பத்திரிகைகள் என்ன செய்துகொண்டிருக்கின்றன? வடநாட்டதிகளுக்கு ஆதரவு காட்டிக் கொண்டிருக்கும் இந்தக் காங்கிரஸ்காரர்கள், தென்னாட்டுப் பஞ்சத்தைப்பற்றிக் கவனிக்காமலிருப்பதேன். வடநாட்டுப் பஞ்சத்தை நீக்கக் கச்சேரிகளும், நாட்டியங்களும், நாடகங்களும் ஆடிப்பெரும் பணம் கொடுத்தவர்களும் பத்திரிகைகளில் பத்திபத்தியாக ஒதுக்கிப் பணம் தந்தவர்களை விளம்பரப்படுத்தியதன் மூலம் பெரும் பொருளைத் தென்னாட்டிலிருந்து வசூலித்து வடநாட்டுக்கு அனுப்பிவைத்தவர்களும் இன்று எங்கே போயினர்? நம் நாட்டு மக்களின் பசிப்பிணியை ஒழிப்பதில் ஏன் இவர்கள் அக்கறை எடுத்துக்கொள்ளவில்லை.

தி. மு. கழகப் பொதுக் கூட்டங்கள்

13—5—51

கோயம்பத்தூர்
அறிஞர் அண்ணாத்துரை.

சென்னை, (ராபின்சன்பார்க்)
தோழர்கள் ஏ. வி. பி. ஆசைத்தம்பி, பி. ராமசாமி.

14—5—51

ஆனைமலை
அறிஞர் அண்ணாத்துரை.

15—5—51

நரசிங்கபுரம்
தோழர்கள் என். ஜீவரத்தினம், காஞ்சி கலியாணசுந்தரம்.

16—5—51

ஈரோடு
தோழர்கள் இரா. நெடுஞ்செழியன், எஸ். ஆர். சந்தானம்.

பேச்சு மன்றம்

கம்பம்: இவ்வூர் பல கட்சித் தோழர்களும் ஒன்று சேர்ந்து விவாத மன்றம் ஒன்று நிறுவினர் அதற்குத் தயாரிப்பு கமிட்டி உறுப்பினர்களாக வி. கே. சாமி, அனிபா செயலாளர்கள்; அபூதாகிர் நிதிகாப்பாளர்; தங்காச ஆகியோர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டனர். மேலும் பல தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டு விவாத மன்றத்தின் முக்கியத்துவத்தைப்பற்றிச் சில தோழர்கள் சொற்பொழிவாற்றினர். பின் கூட்டமினிது முடிவுற்றது.

பொன்மலையில் மாபெருங் கூட்டம்

தலைவர்களை விடுதலை செய்யும்படி கோரிக்கை

3-5-51 அன்று மாலை 7-மணிக்கு பொன்மலையில், தெ. இ. ரயில்வே லேபர் யூனியன் சார்பாக, தோழர் பாண்டுரங்கன் தலைமையில் பொதுக் கூட்டம் நடைபெற்றது. 6000த்திற்கு மேற்பட்ட தொழிலாளிகளும், பொதுமக்களும் கலந்துக் கொண்டனர். 2 வருட கொடிய அடக்குமுறைக்குப் பிறகு, சங்கச் சொத்துக்கள் இன்னும் திருப்பித் தராமல் இருக்கும் சூழ்நிலையில், ஆயிரக்கணக்கில் தொழிலாளிகளும் பொதுமக்களும் குழுமியிருந்து தெ. இ. ரயில்வே லேபர் யூனியனின் மீது, செங்கொடியின் மீது, தங்களுக்கிருந்த அசைக்க முடியாத நம்பிக்கையை எடுத்துக் காட்டினர்.

புதுக்கோட்டைச் சிறையில் இருதய கோளாறின் காரணமாக, அபாயகரமான நிலைமையில் இருந்துவரும் சங்கத் தலைவர் தோழர் எம். கல்யாண சுந்திரத்தை உடனடியாக ஜாமீனிலாவது விடுதலை செய்ய வேண்டுமெனவும், 12 தெலிங்கானத் தோழர்களின் தூக்குத்தண்டனையை ரத்து செய்ய வேண்டுமெனவும், சங்கப் பொதுக் காரியதரிசியும், சென்னைச் சட்டசபை அங்கத்தினருமான தோழர் கே. அனந்த நம்பியாரை உடனடியாக விடுதலை செய்ய வேண்டுமெனவும், கொடூரமான அடக்குமுறைக்கு ஆளாகி, சகிக்கமுடியாத கஷ்டங்களுக்கு மத்தியிலும், உறுதி குன்றாது, வீரமுடன் நிற்கும் ரயில்வேத் தொழிலாளிகளுக்கும், சிறையில் வதைந்துக் கொண்டிருக்கும் தோழர்களுக்கும், வேலையின்றி இருக்கும் தோழர்களுக்கும், அனைவரின் குடும்பங்களுக்கும் வாழ்த்து தெரிவித்தும், ஆக 4 தீர்மானங்களை தோழியர் பாப்பா படித்தார். தீர்மானங்கள் அனைத்தும் ஒரு மனதாக நிறைவேற்றப்பட்டன.

பின்னர் அஞ்சாத கம்யூனிஸ்டுகளின் செய்திகளை வெளியிட்ட விடுதலைச் செய்தித்தாளை வரவேற்றுப் பேசினர். மற்றும் 12, 13-ந் தேதிகளில் நடக்கவிருக்கும் கூட்டத்திற்கு அனைவரும் கலந்துகொள்ளும்படி கேட்டுக்கொண்டு கூட்டத்தை முடித்தனர்.

ஏஜெண்டுகளுக்கு

ஏஜெண்டுகளுக்கு இம்மாதப் பட்டியல் அனுப்பப்பட்டிருக்கிறது. பட்டியல் படியுள்ள தொகையை 12-5-51-க்குள் அனுப்பித் தரும்படி கேட்டுக்கொள்கிறோம். அப்படி அனுப்பத்தவறும் ஏஜண்டுகளுக்கு 13-5-51 முதல் பத்திரிகை முன் அறிவிப்பின்றி நிறுத்தப்படும்.

மானேஜர்

தி. மு. கழக நடவடிக்கைகள்

நாகூர்:—6-5-51 ஞாயிறு காலை 10 மணிக்குத் தோழர் ப தி. ராசன் தலைமையில் செயற்குழு கூடி பல தீர்மானங்கள் நிறைவேற்றினர். அவை:—தஞ்சை மாவட்டச் செயலாளர் தோழர் கே. கே. நீலமேகம் அவர்கள் குமாரன் செல்வம் திடீர் மறைவிற்கு அனுதாபம் தெரிவித்தும்; நாளது 19-5-51 சனிக்கிழமை நாகர்கோவில் தோழர் கி. மனோகரன் அவர்களை வரவழைத்துப் பொதுக்கூட்டம் நடத்துவதாகத் தீர்மானித்தும்; செயற்குழு உறுப்பினர்கள் மே மாதத்திலிருந்து மாதச் சந்தா நாலணா கொடுப்பதென்றும்; ஒவ்வொரு மாதம் 15 தேதிக்குள் சந்தா செலுத்திவிட வேண்டும் என்று தீர்மானிக்கப்பட்டது.

* *

நாகர்கோவில்:—4-11-49-ல் துவக்கின தி. மாணவர் முன்னேற்றக் கழகம் சிறப்புறத் தொண்டாற்றி வரும்போது அதில் மாணவத் தோழர்கள் மட்டுமே உறுப்பினராக விருக்க உரிமை இருந்தது. பெரும்பான்மையான தொழிலாளத் தோழர்கள் நம் கழகத்தில் சேர ஆவல் கொண்டிருந்ததால், தொழிலாளத் தோழர்களும் கழகத்தில் உறுப்பினராக விருக்க உரிமை வழங்கப்பட்டது. கழகத்தில் பெரும்பான்மையான தொழிலாளத் தோழர்கள் உறுப்பினராக விருந்த காரணத்தால் செயற்குழுக் கூட்டத்தில் அதைத் திராவிட முன்னேற்றக் கழகமாக மாற்றியமைக்கத் தீர்மானிக்கப்பட்டது. அதன்படி 21-4-51-ல் திராவிட முன்னேற்றக் கழகம் நிறுவப்பட்டு புதிதாகச் செயற்குழு உறுப்பினர்களும் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

செயலாளர் எஸ். சிவராமன்; துணைச்செயலாளர்-சி கே. பெருமாள்; பொருளாளர்-பி எஸ். வடிவேல்; வி. உறுப்பினர்-டி கே. கேசவன் மற்றும் செயல் உறுப்பினர் தேர்ந்தெடுக்கப்பட்டு நன்றிகூறக் கூட்டமினிது முடிந்தது.

*

தென்காசி:—6-4-51-ல் தி. மு. கழகத் தோழர்கள் கூடி கையெழுத்துப் பிரதி மாத இதழ் ஒன்று முதன் முதலாக எழுதியமைக் குறித்துப் பலர் பேசினர். இதற்கு கொற்கை அரசு ஆசிரியராக ஏற்படுத்தப்பட்டார். பின்னர் பல தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டு நன்றி கூறக்கூட்டமினிது முடிந்தது.

விதவை மணம்

மயூரம், மே. 9—

இவ்வூர் கூரைநாடு பாசிக்கடைத் தெருவிலிருக்கும் குமரன் இல்லத்தில் தோழர் வாதராசுவிற்கும், தோழியர் தனத்திற்கும், ஜி. நாராயணசாமி தலைமையில் திருந்திய முறைப்படித் திருமணம் நடைபெற்றது. தோழியர் தனத்திற்கு ஓராண்டு நிரப்பப்பெற்றக் குழந்தையுண்டு.

Edited, Printed & Published by T. M. Parthasarathy at the Mercantile Press, 2/45 Muthumari Chetty Street, Madras-1.